1970 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆடு துறை 27 என்ற நெல் 1 ஏக்கருக்கு 1,726 கிலோ விளைந்தால், இந்த 'கருணா' என்கிற நெல் ஒரு ஏக்கருக்கு 1998 கிலோ குறைந்த அளவு, 2,228 கிலோ வரிஏய்ப்பு அதிகப்படி அளவு விளையும்.

வரி ஏய்ப்பு.

* 68 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜ்ய வர்த்தக வரி இலாகா அதிகாரிகள் 1969 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மொத்த வியாபாரக் கடை களையும், எண்ணெய் ஆலைகளின் விற்பனை இடங்களையும் சென்னை யில் சோதனை போட்டார்களா ?

(இ) அதனால் சர்க்காருக்கு எவ்வளவு வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) வரி ரூ. 1,91,735.83.

(இ) அபராதம் ரூ. 31,944.45.

கால்நடை மருந்தகங்கள்

* 72 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கிருஷ்ணராயபுரத் திற்கென கால்நடை மருந்தகம் ஒன்றை ஏற்படுத்த 1968-ம் ஆண்டி லேயே அரசு அனுமதித்துள்ளது. 1–2–1969 முதல் அது நிரந்தா மான கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, லாலாப் பேட்டை, பழைய ஜெயங்கொண்டம், கொசூர் போன்ற இடங்களில் கிளை மருந்தகம் இதுவரை துவக்கப்படவில்லை. இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

* 73 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியில் எத்தனை புதிய கால்நடை மருந்தகங் கள் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏதுவுமில்லை.